(ஆ) ஆம் எனில், பணி எப்போது முடியும் ?

(இ) அணையின் மூலம் பாசன வசதி பெறும் நிலம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமேயில்லை.

பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம்.

*2343 **டாக்டர் து. திருமூர்த்தி திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகுபொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கேளம்பாக்கம், கோவளம் இரு ஊர்களையும் இணைக்கும் பாதையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலம் பழுதுபட்டு ஆபத்தான நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது வாகனங்கள் செல்வதற்கு அரசு தடை விதிக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அது குறித்து அரசுக்கு ஒரு அறிக்கை வந்திருக்கிறது. அது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகம், படிப்பு மற்றும் மருத்துவம் செய்ய வேண்டி கடற்கரைப் பகுதியிலிருந்து கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் போன்ற பெரிய ஊர்களுக்கு அன்றாடம் ஏராளமான மக்கள் வந்து போகும் அவசியம் இருப்பதாலும் Madras–Cuddalore Ferry service அமைக்க முற்படும் இந்த அரசு கோவளத்தையும் இடைப்பட்ட துறைமுகமாக அமைக்கும் சந்தர்ப்பம் இருப்பதாலும் இதற்கு உறு துணையாகவுள்ள இந்த மேம்பாலம் கட்டும் பணியை, அதற்கான முயற்சியை துரிதப்படுத்த முயலுமா என அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 22]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தப் பாலம் மிக அத்தியாவசியமான ஒன்று என்பதை மறுப்பதற்கு இல்லை. எனவேதான் இந்தப் பாலத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டுமென்று முதலில் நினைத்தோம். ஆனால் புதுப்பிப்பதை விட அதைப் புதிதாக கட்டுவது சிறந்தது என்று ஹைவேஸ்ஸில் இருக்கிற ரிசர்ச் இன்ஸ்ட்டிடியூட்டின் ரிப்போர்ட் எங்களுக்குத் தெரிவித்தது. அதன் அடிப்படையில் 100 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளம்பாக்கத்திலிருந்து கோவளத்திற்கும், கோவளத்திலிருந்து கேளம்பாக்கத்திற்கும் வரவேண்டுமானால் தற்போது 22 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நான் தமிழில்தான் பதில் சொன்னேன்.

வெள்ளக் கால்வாய் ஆழப்படுத்தலும், தடுப்பு அணை கட்டுதலும்.

***3167 திரு. ஏ. கோதண்டம்** :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய குணக்கரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள எட்டிக்குட்டிமேடு கிராமத்தில் உள்ள வெள்ளக் கால்வாய்க்கு தடுப்பு அணை கட்டவும், கால்வாயை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தீவிர ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறு இருக்குமேயானால், பணி மேற்கொள்ளப்படும்.